DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI

| | | |
|---|---|---|
| Case number | : | OS 198 of 2020 |
| Deposition of witness | : | PW1 |
| Name | : | கருப்பசாமி |
| Father Name | : | பெரியசாமி |
| Age | : | 35 |

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 26.08.2025.*

<u>குறுக்கு விசாரணை</u>

1. எனது தாத்தாவின் பெயர் நாச்சிமுத்து கவுண்டர் என்றால் சரிதான். அவர் கடந்த 08.07.1975 தேதியில் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். மேற்படி நாச்சிமுத்து கவுண்டருக்கு ஒன்றாம் பிரதிவாதி பழனியம்மாள் ஒரே பெண்வாரிசு என்றால் சரிதான், மற்றொரு பெண்ணும் இருந்தார் அவர் சிறு வயதிலேயே திருமணம் ஆகாமல் இறந்து விட்டார். மேற்படி நாச்சிமுத்து கவுண்டருக்கு பழனியசாமி மற்றும் பெரியசாமி என்று இரண்டு ஆண் வாரிசு என்றால் சரிதான். மேற்படி பெரியசாமிக்கு ஒரே ஆண் வாரிசு நான் தான் என்றால் சரிதான்.

2. தாவா சொத்திற்கு தட்டு தடை தோட்டம் என்று பெயர் என்றால் சரிதான். தாவா சொத்து ஊத்துக்குளி - காங்கேயம் ரோட்டில் கிழப்புறமாக அமைந்துள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து விவரத்தில் மொத்தம் 10 ஐட்டம் சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பத்து ஐட்ட சொத்துகளுக்கும் சர்வே எண் வேறு என்றால் அவற்றுள் ஏழு சொத்துக்களுக்கு ஒரே சர்வே எண், உட்பிரிவு மட்டும் மாறும், ஏனைய மூன்று சொத்துக்கள் வேறு சர்வே எண் கொண்டது.

3. மேற்படி 10 ஐட்டம் சொத்துக்களை சேர்த்து மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் தோராயமாக 1.40 ஏக்கர் இருக்கும். மேற்படி

சொத்துக்கள் எனக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் 1996 ல் ஒன்றாம் பிரதிவாதியுடன் செய்து கொண்ட பாகப்பிரிவினை ஆவணம் படியும், 2014 ல் ஏற்பட்ட எனது தந்தை மற்றும் உடன் பிறந்த சகோதரிகள் எனக்கு கொடுத்த பாக சாத்திய விடுதலை ஆவணங்கள் படியும் பாத்தியம். 1996 ல் செய்த பாகப்பிரிவினையின் போது அதில் கண்டுள்ள D ஜாபிதா சொத்துதான் ஒன்றாம் பிரதிவாதி பழனியம்மாளுக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான்.

4. மேற்படி D ஜாபிதா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 33 சென்ட் என்றால் சரிதான். அந்த 33 சென்ட் தனியாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை, தற்போது வரை பெருந்துறை நீதிமன்றத்தின் அட்டாச்மென்ட் ஆர்டரில் உள்ளதால் உட்பிரிவு செய்யப்படாமல் உள்ளது. அவ்வாறு அட்டாச்மென்ட் உள்ள வழக்கின் எண் குறிப்பிட்டு சொல்ல இயலுமா என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு மேற்படி 33 சென்ட் அட்டாச்மெண்டில் உள்ளது என்று இந்த வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

5. 1996 ல் பாக பிரிவினை செய்தபோது பாகஸ்தர்கள் சென்று வர 24 லிங்க் மற்றும் 20 லிங்க் அகலத்தில் கிழமேல் மற்றும் தென் வடல் தடம் அமைத்து கொண்டோம் என்றால் சரிதான். அந்தத் தளத்தில் பழனியம்மாளுக்கும் பாத்தியம் உள்ளது என்றால் சரிதான். அந்த தடத்தை ஒட்டி ஈபி லைன் உள்ளதா என்றால் எனது காட்டிற்குள் தான் உள்ளது. அவ்வாறு ஈபி லைன் அமைப்பதில் எனக்கும் பிரதிவாதிகளுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டதா என்றால் இல்லை. என்மேல் கருத்து வேறுபாட்டு காரணமாக 1ம் பிரதிவாதி அவிநாசி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

6. இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் மற்றும் அளவையரை கொண்டு தாவா சொத்து அளக்கப்பட்டபோது 1996 ல் ஏற்பட்ட ஆவணங்களை காட்டி அளக்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு நான் ஆட்சேபனை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையரின் அறிக்கையின்படி புல வரைப்படம் மற்றும் கிராம கணக்குகள் அடிப்படையில் அளவீடு செய்யப்பட்டது என்று கண்டுள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனாரோ முன்னோர்களோ 1996 க்கு முன்பு தாவா சொத்தின் பாகத்தை மூன்றாம் நபர்களுக்கு விற்றுள்ளார்களா என்றால் விற்றுள்ளார்கள்.

7. ஒன்றாம் பிரதிவாதியின் 33 சென்ட் சப்டிவிஷன் செய்யப்படாத காரணத்தினால் நானும் ஒன்றாம் பிரதிவாதியும் கூட்டு பாகஸ்தர்கள் என்று சொன்னால் சரியல்ல, ஏற்கனவே பாகப்பிரிவினை ஆகிவிட்டது. தாவாவிற்கு முன்னதாக தாவா சொத்துக்கள் அளப்பதற்காக நான் மனு செய்து ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் அளக்க முயற்சித்தபோது தான் பிரச்சினை ஏற்பட்டது. அவ்வாறு நான் மனு செய்ததை காட்ட ஏதேனும் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். அந்த மனுவின் பேரில் 1ம் பிரதிவாதிக்கு ஏதேனும் அறிவிப்பு கொடுக்கப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது.

(பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

DHARANEETHER B

Digitally signed by DHARANEETHER B
Date: 2025.08.26 19:03:52 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.